MC.59/2025

07.04.2026

PW2- குட்டியப்பன், த/பெ.துரைசாமி, வயது–75

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 03.22 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 03.46 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 07.04.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

மனுதாரரும் நீங்களும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். உங்கள் முகவரி என்னவென்றால் ஜிங்கல்கதிரம்பட்டி கிராமம். ஜிங்கல்கதிரம்பட்டி கிராமம் போச்சம்பள்ளி தாலுக்கா மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அடங்கியுள்ளது என்றால் சரிதான். உங்களுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் முழுமையான முகவரியை மறைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு பூர்வீக சொத்து ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். உங்கள் தங்கைக்கும் எதிர்மனுதாரருக்கும் எப்போது திருமணம் ஆனது என்றால் எனக்கு தெரியாது. ஜிங்கல்கதிரம்பட்டி கிராமத்திற்கும் எதிர்மனுதாரரின் வீட்டிற்கும்

சுமார் 30–35 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் குடும்பத்தில் நடக்கும் சங்கதிகள் உங்களுக்கு மனுதாரர் மூலமாக தான் தெரியும் என்றால் எனக்கு நேரடியாகவே தெரியும். உங்கள் தங்கை வீட்டில் நீங்கள் குடியிருக்கிறீர்களா என்றால் இல்லை. நீங்கள் வீட்டில் குடியிருந்தால் மட்டுமே அல்லது பக்கத்து வீட்டில் வசிப்பதால் மட்டுமே உங்களுக்கு எதிர்மனுதாரர் வீட்டில் நடக்கும் விவரங்கள் நேரடியாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. உங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் ஒரு சில வருடங்கள் மட்டுமே மனுதாரரும் எதிர்மனுதாரரும் நல்ல முறையில் வாழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். மனுதாரரும் எதிர்மனுதாரரும் எத்தனை ஆண்டுகள் நல்ல முறையில் குடும்பம் நடத்தியதாக சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் எனக்கு தெரிந்த வரையில் நான்கு, ஐந்து வருடங்கள் மட்டுமே பிரச்சனை அதற்கு முன்பு நல்ல முறையில் தான் குடும்பம் நடத்தி வந்தார்கள். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் மனுதாரரை, எதிர்மனுதாரர் பலமுறை அடித்தும், தாக்கியும் கொடுமைகள் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவ்வாறு பிரச்சினை ஏற்பட்டது. உங்கள் தங்கை எந்த ஆண்டு பிரச்சனை ஏற்பட்டு வீட்டை விட்டு சென்றார் என்றால் இன்றைய தேதியிலிருந்து ஐந்து வருடம் முன்னர் என் தங்கை வீட்டை விட்டு சென்றுவிட்டார். உங்கள் தங்கை உங்கள் வீட்டிற்கு வராமல் மற்றொரு தங்கையான காளியம்மாள் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். உங்கள் தங்கை செல்லும்போது துணி, மணி, நகைகள் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்று சொன்னால்

எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் வீட்டிலேயே உள்ளது. உங்கள் தங்கை நகையை எடுத்துக்கொண்டு மனுதாரருடைய இந்தியன் சேமிப்பு வங்கி கணக்கு எண்ணில் நகைகளை அடகு வைத்து ரூ.1,02000/− ஒருமுறையும், ரூ.2,13000/− மற்றொரு முறையும் அடகு கடன் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நகை அடகு கடன் தொகை பெற்றுக்கொண்டு தான் டோன்போஸ்கோ மாணவர் விடுதிக்கு எதிரே ஓட்டல் தொழில் செய்து ஒரு நாளைக்கு ரூ.10,000/− வருமானம் ஈட்டி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் தெரிந்து அதை மறைத்து நீங்கள் பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் உள்ளதாக சொல்லுகிறீர்கள் அதன் புல எண் மற்றும் விஸ்தீரணம் சொல்ல முடியுமா என்றால் ஆறு ஏக்கர் நிலங்கள் உள்ளது அதன் புல எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருடன் உடன் பிறந்தவர்கள் ஆண் வாரிசுகள் 7 பேர், பெண் வாரிசுகள் 4 பேர் என்று சொன்னால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரிடம் உள்ளதாக சொல்லும் ஆறு ஏக்கர் நிலம் பாகம் பிரிக்கப்படாமல் கூட்டுக்குடும்ப சொத்தாக உள்ளது என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. எதிர்மனுதாரருடைய உடன் பிறந்த சகோதரர் சென்னு என்பவர் கொரோனா காலக்கட்ட இறந்துவிட்டார் அவருடைய வாரிசுகள் சரோஜா என்பவர் மேற்படி ஆறு ஏக்கர் நிலத்தில் பாக உரிமை கோரி அசல் வழக்கு எண்.182/2024 கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தில் பாக உரிமை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று

சொன்னால் எனக்கு தெரியாது. உங்களுடைய தங்கை வீட்டில் நடக்கும் விவரங்கள் எதுவும் உங்களுக்கு தெரியாது எனவும் உங்கள் தங்கை சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். உங்கள் தங்கை வீண் பிடிவாதமாக எதிர்மனுதாரரை அவமானப்படுத்தும் விதமாக தனியாக பிரிந்து வந்து வாழ்கிறார் எனவும் உங்கள் தங்கைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் பத்தி 7 மற்றும் 9—ல் உள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்று சொன்னால் உண்மையான சங்கதி தான். உங்கள் தங்கை வியாபாரம் மூலம் நல்ல வருமானம் ஈட்டி வரும் காரணத்தினால் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 2018 ஆம் ஆண்டு உங்கள் தங்கை தான் எதிர்மனுதாரரிடம் சண்டையிட்டு வீண் பிடிவாதமாக தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.04.07 16:39:54 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.